பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 29 புதன்கிழமை (12-02-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 77

முச்சந்தி முரளி



சொகுசு தேடி போன வையளுக்கு 'ஷொக்' அடிக்கிற செய்தி...!

## இடம் பெயர்ந்து சென்று

# கொழும்பில் தங்கியுள்ளோரை மீண்டும் பதிவுசெய்ய உத்தரவு!

## • முழு விவரங்களையும் பொலீஸிற்கு 2 வாரத்துக்குள் தெரிவிக்க பணிப்பு

கொழும்பு, பெப்ரவரி 12

இடம்பெயர்ந்து சென்று, கொழும்பு உட்பட மேல் மாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் தங்கியுள்ளோர் மீண்டும் தமது விவரங்களை பொலிஸில் பதிவு செய்ய வேண்டும்.

இடம்பெயர்ந்து அகதி முகாமுக்கு வெளியில் தங்கியுள்ள அனைவரும், தங்களது வசிப்பிடத்துக்கு அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களில் இரு வாரத்துக்குள் பதிவு செய்ய வேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்தது.

கடந்த வருடமும் இதே போன்று அரசு உத்தரவிட்டது என்பதும் —

அதன்படி கொழும்பில் தங்கியுள்ள தமிழர்கள் தமது விவரங்களை பொலிஸில் பதிவு செய்தனர் என்பதும் தெரிந்ததே.

நேற்றைய உத்தரவில் தெரிவிக்கப்பட்ட அம்சங்கள் வருமாறு:-

★ வீடுகளை வாடகைக்கு கொடுத்தோர் அங்கு தங்கியுள்ள வெளியாட்கள் பற்றி பொலீஸிற்கு அறிவிக்க வேண்டும்.

★ அறிவிக்கத்தவறுவோர்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## ஸ்ரீலங்கா கடற்படை சூடு! இந்திய மீனவர் மரணம்!!

சென்னை, பெப். 12

கடந்த திங்களன்று கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்கள் மீது ஸ்ரீலங்கா கடற்படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்தார்; இருவர் காயமடைந்தனர்.

சிதம்பரனார் மாவட்டத்தைச் சேர்ந்த இந்த மீனவர்கள் இந்தியக் கடல் எல்லையில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது ரோந்து வந்த ஸ்ரீலங்கா கடற்படையினர் அவர்களை நோக்கிச் சுட்டனர் என்று தகவல்கள் தெரிவித்தன.

புதுக்கோட்டை மாவட்டம், கோட்டைப் பட்டினம் பொலீஸ் நிலையத்தில் இது தொடர்பாக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. [உ-எ]

## கிளிவெட்டி, சம்பூரில் தமிழ் இளைஞர்கள் கைது!

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த மாதம் 21ஆம் திகதி முதல் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டுள்ள கிளிவெட்டி, சம்பூர், சீதனவெளி கிராமங்களைச் சேர்ந்த சகல தமிழ் இளைஞர்களும் படையினரால் கைது செய்யப்பட்டு முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

சுற்றி வளைப்பின்போது, ஐந்து தமிழ் இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் —

பல இந்து ஆலயங்கள் இடித்து நாசமாக்கப்பட்டதாகவும் —

இரு இராணுவ முகாம்கள் அங்கு அமைக்கப்பட்டிருப்பதாகவும் —

கிளிவெட்டியில் பௌத்த விகாரை ஒன்றை அமைக்கவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## தாண்டிக்குளம் முகாமிலும் 16தமிழ் இளைஞர்கள் கைது!

வவுனியா தாண்டிக்குளம் தடை முகாம் பகுதியில் கடந்த நான்கு நாட்களில் 16 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இத்தடை முகாம் பகுதியில் பெண்கள் உட்பட அனைத்துப் பயணிகளும் படையினரின் கெடுபிடிக்கு உள்ளாக்கப்படுவதாகவும்—

வவுனியாக் கடைகளில் பணிபுரியும் தமிழ் தொழிலாளர்கள் அடிக்கடி படையினரால் கைது செய்யப்பட்டு முகாமுக்குக் கொண்டு செல்லப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## புலிகளின் நடவடிக்கை முழுக் கட்டுப்பாட்டிலாம்!

### தமிழக முதல்வர் கூறுகிறார்

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் முழுவதும் கட்டுப்படுத்தப்பட்டுவிட்டன என்று தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா புதுடில்லியில் நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

தமிழகத்தில் சிறிய அளவில் ''மினி எமர்ஜென்ஸி'' இருப்பதாகக் கூறப்படுவதை அவர் மறுத்தார்.

சில காலமாக தமிழ் நாட்டில் நிலவிவந்த நெருக்கடியைச் சமாளிக்கவே 'தடா' சட்டம் பயன்படுத்தப்படுவதாகவும் செல்வி ஜெயலலிதா சொன்னார். [உ-எ]

## அடுத்த தொகுதி அகதிகள் நாளை திருமலை புறப்பாடு

தமிழ்நாட்டில் இருந்து அடுத்த தொகுதி இலங்கைத் தமிழ் அகதிகள் நாளை வியாழன் கப்பல் மூலம் திருகோணமலை நோக்கி புறப்படுவார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

கோவை மாவட்டத்தில் முகாம்களில் தங்கியுள்ள அக

[6 ஆம் பக்கம் பார்க்க]

## ★ இந்தியாவுக்குள் ஊடுருவ

# காஷ்மீர் தீவிரவாதிகளின் பேரணி புறப்பட்டது!

ஸ்ரீநகர், பெப். 12

இந்தியாவின் கட்டுப்பாட்டில் உள்ள ஜம்மு-காஷ்மீருக்குள் ஊடுருவும் தமது திட்டத்தின்படி காஷ்மீர் தீவிரவாதிகள் நேற்றுப் பேரணியாகப் புறப்பட்டனர்.

பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் உள்ள ஆஸாத் - காஷ்மீரின் தலைநகரமான முஸாபர் நகரில்இருந்து பேரணி நேற்று ஆரம்பமானது.

பாகிஸ்தான் அரசு இந்தப் பேரணியைத் தடை செய்திருந்தபோதிலும் ஆயிரக்கணக்கான போராளிகளும் அவர்க

[6 ஆம் பக்கம் பார்க்க]

## தினசரி இரவில் ஷெல் தாக்கு

தென்மராட்சி, பெப். 12

ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து தினமும் இரவு வேளைகளில் ஷெல் வீச்சுக்கள் நடத்தப்படுகின்றன; அடிக்கடி துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

முகாமிலிருந்து ஏவப்படும் ஷெல்கள் இயக்கச்சி, கோயில் வயல், பேராலை, கறுக்காய் வெளி உட்பட பல இடங்களிலும் தினசரி விழுந்து வெடிக்கின்றன.

அதனால் இப்பகுதி மக்கள் பீதியுடன் இரவைக் கழித்து வருகின்றனர். [ஒ-117]

## மணலாறில் ஷெல் வீச்சு!

யாழ்ப்பாணம், பெப். 12

மணலாறு மாவட்டத்தில் கொக்குத்தொடுவாயை அடுத்துள்ள இராணுவ முகாமில் இருந்து நேற்று அதிகாலை தொடக்கம் குடியிருப்புகளை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

நாயாறு, அலம்பில், குமுழமுனைப் பகுதிகளில் ஷெல்கள் விழுந்து வெடித்தன. [ஒ-3]

## தாக்குதல் 'தலைவிதி' எப்போது.....?

கொழும்பு, பெப். 12

யாழ்ப்பாணக் குடாநாட்டின் மீது இராணுவம் பாரிய தாக்குதல் ஒன்றை நடத்துமா? எப்போது நடத்தும்?— என்பது குறித்து இங்கு பலவிதமான ஊகங்களும், உத்தியோகப்பற்றற்ற தகவல்களும் அடிபடுகின்றன.

யாழ்ப்பாணம் மீதான பெரும் தாக்குதல் அனேகமாக நடக்கும் என்றே எதிர்பார்க்கலாம் என அரசியல் ஆய்வாளர்கள் கூறியதாக ரோய்டர் செய்தி ஏஜென்ஸி தெரிவித்திருக்கிறது.

இதேவேளை யாழ்ப்பாணக் குடாநாடு மீதான உத்தேச தாக்குதலுக்கு ''ஒப்பரேஷன் டெஸ்ரினி'' [Operation Destiney] — ''தாக்குதல் தலைவிதி'' — எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளதாக மற்றொரு செய்தி தெரிவித்தது.

## மின்சார விநியோகத்துக்கான

# சுன்னாகம் - இயக்கச்சி திருத்த வேலை அடுத்த மாதம்

யாழ்ப்பாணம், பெப். 12

யாழ். மாவட்டத்துக்கு மின் விநியோகம் வழங்குவதற்கு முதற்படியாக, சுன்னாகத்தில் இருந்து இயக்கச்சி வரையான மின் இணைப்புகளைத் திருத்தும் வேலைகள் அடுத்த மாதம் முதலாவது வாரத்தில் ஆரம்பிக்கப்படும்.

இலங்கை மின்சார சபையின் வடபிராந்திய பொது முகாமையாளர் திரு. எஸ். கந்தசாமி இத்தகவலை வெளியிட்டார்.

மாங்குளம் பகுதியில் மின் இணைப்புத் திருத்த வேலைகள் பூர்த்தியாகியுள்ளன. மாங்குளம் தொடக்கம் வவுனியா வரையுள்ள மின்சார இணைப்புகளைச் சீர்செய்யும் வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. அந்த வேலைகள் இம்மாத இறுதியுடன் பூர்த்தியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதன் பின்னர், சுன்னாகத்தில் இருந்து இயக்கச்சி வரை

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தெற்கில் மாகாண சபை உறுப்பினர் கடத்தப்பட்டார்

கொழும்பு, பெப். 12

ஊவா மாகாண சபையில் அங்கம் வகிக்கும் ஐக்கிய சோஷலிஸ அணி உறுப்பினரான தர்மசிறி பஸநாயக்கா கடந்த 2 ஆம் திகதி முதல் காணாமற் போய் விட்டார் என்று பண்டாரவளைப் பொலீஸில் முறையிடப்பட்டுள்ளது.

சம்பவதினம் பஸநாயக்கா தமது வானில் பத்திரிகைகள் வாங்குவதற்காக நகருக்குச் சென்றார் என்றும், பின்னர் அவர் வீடு திரும்பவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

காணாமற்போன சமயம் அவரிடம் 25 ஆயிரம் ரூபா பணமும் இருந்தது என்று தெரிவிக்கப்படுகின்றது.

பிந்தனுவேவா என்னும் இடத்தில் வைத்து இனந்தெரியாத நான்கு பேர் பஸநாயக்காவைப் பலாத்காரமாக வானில் இருந்து இழுத்து எடுத்து, வானின் பின் ஆசனத்தில் அவரை ஏற்றிக் கொண்டு சென்றனர் என்று பஸநாயக்காவின் மனைவி பொலீஸில் செய்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை — சம்பவதினம் அன்று அதே இடத்தில் இருந்து 32 வயது பெண் ஒருவரும் காணாமற் போய் விட்டார் என்று பண்டாரவளைப் பொலீஸில் முறையிடப்பட்டுள்ளதாம். [இ-எ]

# போதைவஸ்துக் கடத்தல் முயற்சியில் யாழ்.மாணவன்

கொழும்பு, பெப். 12

சுமார் 5லட்சம் ரூபா பெறுமதியான போதை வஸ்துக்களை இலங்கைக்குள் கொண்டு வர எத்தனித்த தமிழ் மாணவர் ஒருவர் கட்டுநாயக்கா விமானப்பகுதி சுங்க அதிகாரிகளிடம் சிக்கிக் கொண்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த மாணவரான இவர் சிங்கப்பூரில் இருந்து கொழும்புக்கு வந்த போதே போதைவஸ்துடன் கைது செய்யப்பட்டாராம்.

வானொலி கஸட், ஒலி வாங்கிக் கருவிகளுக்குள் மூன்று பொதிகளாக இப் போதைவஸ்துக்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன என்றும்—

விசாரணை முடியும் வரை இந்த மாணவரின் பெயர் விவரங்களை வெளியிட முடியாது என்றும்— சுங்கத் திணைக்கள அதிகாரி திரு. யோகரத்தினம் கூறினார்.

# சிவராசனின் உறவினர்கள் கொழும்பில் கைதாம்

கொழும்பு, பெப். 12

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக தேடப்பட்டு வந்தவரும் பின்னர் தற்கொலை செய்து கொண்டவருமான சிவராசனின் இரு நெருங்கிய உறவினர்கள் கொழும்பில் கைது செய்யப்பட்டனர் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

அவர்கள் இருவரும் கொழும்பில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

சிவராசனின் மாமியாரும் ஒன்று விட்ட சகோதரருமே கைது செய்யப்பட்டவர்கள் ஆவர். பம்பலப்பிட்டியில் உள்ள வீடு ஒன்றில் வைத்தே அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

ராஜீவ் காந்தி கொலை செய்யப்படுவதற்கு முன்னர் இவ்விருவரும் இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்தனர் என்று இந்திய விசேட புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர். (ஓ-எ)

# ஆங்கில பரீட்சை

யாழ்ப்பாணம், பெப். 12

'பலோமீ' ஆங்கில பரீட்சை யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 15 ஆம் திகதி யாழ். வேம்படி மகளிர் கல்லூரி பரீட்சை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

இந்தப் பரீட்சைக்கான வினாத்தாள்கள், பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் நேற்று யாழ். கல்வி அலுவலகத்திற்கு எடுத்துவரப்பட்டன.

அனுமதி அட்டைகளை நாளை மறுதினம் கல்வி அலுவலகத்தில் பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

# காவியை கைவிட்ட ராமராவ்!

ஹைதரபாத், பெப். 12

ஆந்திர மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் என். ரி, ராமராவ் காவி உடை அணிவதைக் கைவிட்டு விட்டார் என்று அறிவிக்கப்படுகின்றது.

இப்போது வெள்ளை நிற ஆடையையே அவர் அணிந்து வருகின்றாராம்.

நடிகரான ராமராவ் அரசியலில் பிரவேசித்ததைத் தொடர்ந்து காவி உடை அணியத் தொடங்கினார். (உ-எ)

# ஓய்வூதியம்

யாழ்ப்பாணம், பெப். 12

ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் ஜனவரி மாதத்துக்குரிய ஓய்வூதியம் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. (இ)

# கருத்தரங்கும் கூட்டமும்

யாழ்ப்பாணம், பெப். 12

யாழ். பிராந்திய சிகையலங்கரிப்பாளர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று புதன் பிற்பகல் 3 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும். இக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் கலந்துகொள்ளும் போர்க்காலக் கருத்தரங்கும் ஒரு நிகழ்ச்சியாக இடம் பெறும். (உ-51)

# ஆஸ்பத்திரிச் சம்பவம்; செஞ்சிலுவையினர் கவலை!

நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் யாழ். ஆஸ்பத்திரியில் இடம்பெற்ற சம்பவம் குறித்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு ஆழ்ந்த கவலை தெரிவித்திருக்கிறது.

அன்றைய தினம் ஆஸ்பத்திரிப் பகுதியில் குண்டு ஒன்று வெடித்ததும்—

அது ஷெல் குண்டாக இருக்கலாம் என்று கருதப்படுவதாகத் தெரிவித்து நேற்று செய்தி வெளியாகியிருந்ததும் தெரிந்தவையே.

இந்தச் சம்பவம் குறித்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். வதிவிடப் பிரதிநிதி விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இம்மாதம் 10 ஆம் திகதி பிற்பகல் 5.30 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலையில் நடந்த சம்பவத்தையிட்டு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆழ்ந்த கவலை அடைகிறது.

அதிர்ஷ்டவசமாக எவரும் சம்பவம் நடந்த நேரத்தில் அந்தப் பகுதியில் இல்லாமையால் பரிதாபப்படும் வகையில் எவரும் பாதிக்கப்படவில்லை.

எனினும், வைத்தியசாலையின் மக்கள் நடமாடும் பகுதி பலத்த சேதமடைந்துள்ளது.

யாழ். வைத்தியசாலையும், அதைச் சூழ்ந்த பாதுகாப்புப் பகுதியும் 1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்பின் கீழ் உள்ளன.

குடாநாட்டில் போதியளவு கட்டட மற்றும் தகுந்த வைத்திய, சத்திர சிகிச்சை வசதிகளைக் கொண்டு, யாழ். மக்களுக்கும், வைத்திய தேவை உள்ளவர்களுக்குமாக இயங்கி வரும் வைத்தியசாலை இது ஒன்றே.

இந்த நெருக்கடியான காலகட்டத்தில் யாழ். போதனா வைத்தியசாலை ஒன்றே யாழ். மக்களுக்கும், தற்போதைய சூழ்நிலையில் காயமடைவோருக்கும் சேவை புரியும் ஒரு மையமாகும் —என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ]

# மைக்டைஸன் குற்றவாளி

18 வயது அமெரிக்கக் கறுப்பு அழகுராணி ஒருவரை மானபங்கப்படுத்தியதாக குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கில் முன்னாள் குத்துச் சண்டை வீரர் மைக்டைஸன் நேற்றுக் குற்றவாளியாகக் காணப்பட்டார்.

அவருக்கு தண்டனை விதிப்பதை நீதிபதி பட்ரீஷியா கிபோர்ட் அடுத்த மாதம் 6 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

9 மணித்தியால ஆலோசனையின் பின்னர் ஜூரர்கள் சபை மைக்டைஸனை குற்றவாளியாகக் கண்டது.

பாஸ்போர்ட்டை ஒப்படைக்கும்படி மைக்டைஸனுக்கு நீதிபதி உத்தரவு பிறப்பித்தார். டைஸன் முப்பதாயிரம் டொலர் பிணையில் இருந்து வருகின்றார்.

தீர்ப்பு அறிவிக்கப்பட்டபோது மைக்டைஸன் எதுவித உணர்ச்சியையும் வெளிப்படுத்தாது இருக்கக் காணப்பட்டார்.

இத்தகைய குற்றச்சாட்டுக்காக ஆகக்கூடியது 60 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்க சட்டம் இடமளிக்கின்றது, [இ-எ]

# எட்டுச் சிப்பாய்களும் நீண்ட காலம் காவலில்!

கொழும்பு, பெப், 12

நீண்ட காலமாக விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பெரும் எண்ணிக்கையான இளைஞர்களில் எட்டு சிப்பாய்களும் அடங்குவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த எட்டு சிப்பாய்களின் அவல நிலையை மனித உரிமைகளுக்கானவழக்கறிஞர்சங்கம், ஓய்வுபெற்றநீதிபதிஜே.எப்.ஏ. சூஸா தலைமையில் செயல்படும் மனித உரிமைகள் பணியகத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறது.

தடுத்து வைக்கப்பட்டுள்ள சிப்பாய்களில் ஒருவர் இராணுவக் கொமாண்டோ என்று தெரிவிக்கப்படுகிறது.


## குணம் என்னும் குன்றேறி நின்றவர்!

### ஆறுமுகம் சுப்பிரமணியம்

மறைவு குறித்து

## அனுதாபச் செய்தி

எண்பத்தோராண்டுகள் உலகத்தில் வாழ்வது பெருஞ் சாதனை அல்ல. அறுபது வயது கடந்தாலே வீட்டுக்கு வேறு காவற் பிராணியே வேண்டாம் என்று குடும்பத்தினரே அலுத்துக் கொள்ளும் இந்த 'நவீன' காலத்தில் எண்பது கடந்த பின்னரும் தம்மால் காக்கப்பட்டவர் கண்களில் நீர்மல்கிக் காதலாகிக் கசிந்துருக வைத்துப் பூத உடலைத் துறந்து செல்வதுதான் பெருஞ்சாதனை; கிடைத்தற்கரிய பெரும் பேறு. இத்தகைய பெருஞ்சாதனையினை நிகழ்த்தி, பிறரை அழ அழ வைத்து விண்ணுக்கு விருந்தாகும் பேற்றினை அடைந்தவரே ஸ்ரீசுப்பிரமணியம் புத்தகசாலை அதிபர் அமரர் ஆறுமுகம் சுப்பிரமணியம் அவர்கள்.

அவர் 'குணம் என்னும் குன்றேறி நின்றவர்'. இதற்கு அவருடன் அன்பு பூண்டு பழகிய அனைவருமே நிதர்சன சாட்சிகள். நேர்மை. நிதானம், கண்ணியம், காருணியம், அன்புள்ளம் என்ற அனைத்தினதும் ஒருமித்த வடிவமே இப்பெருந்தகையாளர்.

இல்லாமையில் வாழ்வைத் தொடங்கி எல்லா நலமும் குறைவறப் பெற்று நிறைவுடன் அவர் எம்மைப் பிரிந்து விட்டார். அவரைப் பிரிந்த நாங்கள் தாம் குறைவுடையவர்களாய் அவரின் இழப்பினைத் தாங்க முடியாத அவலத்தில் ஆழ்ந்து கிடக்கிறோம்.

பாட நூல்களை விற்பனை செய்தும், தகுதியுடைய ஆசிரியர்களைக் கொண்டு எழுதிவித்து வெளியிட்டும் தமிழ் கூறும் ஈழத்துக் கல்வியுலகிற்குப் பெரும்பணியாற்றிய பெருந்தகையாளர் ஒருவரை இழந்தது மகத்தான பேரிழப்பேயாகும். எண்ணி எண்ணிப் பணம் தொகுத்து எழுதியோர்க்கும், ஊழியர்க்கும் எண்ணாமல், கரவாமல் வழங்கி அவர்கள் மனங்களை நிறைவு செய்ததோடு தம் மனத்தையும் நிறைவு செய்த பெருந்தகையாளரை எப்பிறப்பில் காண்போம் இனி?

அன்னாரின் ஆன்ம சாந்திக்கு ஆடல்வல்லானின் அடியிணைப் போதுகளைப் பணிந்தேத்தித் துதிப்பதல்லால் எம்மால் வேறு யாது செய்தல் இயலும். அசாதாரண மனிதர் ஒருவருடன் கூடி வாழ்ந்த சாதாரண மனிதராகிய எங்கள் நன்றி நிறையுள்ளங்கள் அவருக்குச் செய்யத்தகும் கைம்மாறு இது ஒன்றே.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

— சொக்கன்.

(சி-1499)



## முதலாவது பிறந்த தின வாழ்த்து

பாலசுப்பிரமணியம் - பிரியரூபிணி தம்பதிகளின்
செல்வப் புதல்வன்

### ★ ஜனகனின் ★

முதலாவது பிறந்த தினத்தை இன்று அவரது இல்லத்தில் கொண்டாடுகிறார்கள். அவரை அப்பா, அம்மா, அம்மம்மா, அப்பம்மா, அப்பப்பா, மாமாமார், மாமிமார், சித்திமார், சித்தப்பாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், மச்சான்மார், மச்சாள்மார், உற்றார், உறவினர் எல்லோரும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறார்கள்.

58 A, அரசவீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். [19683]



## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

யாழ்ப்பாணக் கிளை

### ஸ்பெயினில் நடைபெறவுள்ள EXPO - 92ல் பங்குபற்ற விரும்பும் தொண்டர்

மேற்படி தொண்டர்களுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வயது 20 — 25, தொண்டர் சேவை, முதலுதவி, ஆங்கிலத்துடன் வேறு ஒரு வெளிநாட்டு மொழி, சங்கீதம் / நடனம். ஒரு பகுதி பயணச் செலவு ஆகியன உடையவர்கள் விரும்பப்படுவர்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
10-02-1992

ச. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்
(C / 1506)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வாணிகம் இதுவென வழிகாட்டி மறைந்த மாண்பாளர்

# அமரர்
# ஆறுமுகம் சுப்பிரமணியம்

அவர்கள்

(உரிமையாளர், ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை, அச்சகம்)

# நினைவு அஞ்சலி



விண்ணுலகு புக்கான் வியன் சுப்பிரமணியம்
மண்ணுலகு நீத்தான் என்று மனங்கவல்வார்,
பண்ணுலகு ஏத்தும் பரிசுடையான்,
பைந்தமிழன்
எண்ணுகின்ற போதெல்லாம் இனிக்கும்
இயல்புடையான்
தண்ணளவு கீர்த்தி தனைப் படைத்தான்,
ஏழைகட்கு
மண்ணுலகில் வாழ வழிகாட்டி
நின்றமைந்தான்,
உண்ணுகின்ற போதெல்லாம், அவன்
உயிர்காட்டி நின்றொளிர்வான்.

ஐம்பூதத் தொழில்களெலாம் அறிந்துணர்ந்த
அறிவாளன்
செம்பவள வாய்திறந்து செப்பும் மொழியாளன்
இன்றுலக வாழ்க்கை இயல்பாக நீத்திட்டான்
பொன்னுலகம் அன்னவனின் பூ வாசல்,
தெரியாது
கன்றுமனத்தார்; கவலை தெரிவிப்பார்
என்னே இவர் செய்கை ஏமாந்து போகாது
பொன்னேர் சுப்பிரமணியம் பொற்பாதம்
போற்றுவமே!

— த. துரைசிங்கம்,
(உதவிக் கல்விப் பணிப்பாளர்.)

தோற்றம்:
01 - 08 - 1911

அமரத்துவம்:
06 - 02 - 1992

## அவரைப் பற்றி அதிகம் சொல்லலாம்

வண்ணார்பண்ணையில் சரஸ்வதி புத்தகசாலையில் இவர் வர்த்தகம் பயின்ற காலத்தில் 1936 முதலாக இவரின் நற்போக்கை நாமறிந்தோம்.

இவர் 1938 முதலாகத் தனியாகச் சுப்பிரமணிய புத்தகசாலை ஆரம்பித்து, அச்சகமும் நடத்திப் பல நூல்களை வெளியிட்டுக் கல்விப் பணி புரிந்து செந்தமிழும் வளர்த்த பெருமைக்குரியவர். நம்பிக்கை உள்ளவர், நற்போக்காளர், நாகரிகம் வாய்ந்தவர், கொடைவள்ளல் என்றெல்லாம் இவரைப் போற்றுவர். இவர் புகழ் வாழ்க!

- அன்பன் க. சி. குலரத்தினம்.

### அன்பு நிறைந்த நெஞ்சினர், அவலமுறும் ஆர்வலர், அவர் பெருமை நன்குணர்ந்தோர் செலுத்தும் ஆழ்ந்த கண்ணீர் அஞ்சலி!

ஸ்ரீலங்கா புத்தகசாலை
ஆசீர்வாதம் புத்தகசாலை
பூபாலசிங்கம் புத்தகசாலை
மக்மிலன் புத்தகசாலை
சிங்கம் இன்டஸ்றீஸ்
கலைச்சோலை, வல்வெட்டித்துறை

எஸ். கே. சாமி, நெல்லியடி
திருமகள் புத்தக நிலையம், நெல்லியடி
நாயகபாலன் புத்தகசாலை, மானிப்பாய்
துர்க்கா ஸ்ரேஷனர்ஸ், சுன்னாகம்
சிவம் இன்டஸ்றீஸ்
சிவம் மெடிக்கல், சாவகச்சேரி

யாழ்ப்பாணக் கல்லூரிப் புத்தகசாலை
ஞானம் புத்தகசாலை, நாச்சிமார் கோவிலடி
தம்பையா சத்தீஸ்வரன், யாழ்ப்பாணம்
சோபிதா புத்தகசாலை
திருக்கணிதம், சாவகச்சேரி
ம. சி. சந்திரபோஸ்

[சி-1498]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

றோல், பற்றீஸ், புரியாணி போடத் தெரிந்தவர்களும், ரீ மேக்கரும், சப்ளையர்களும், சிறு பையன்களும் தேவை. உடன் நேரில் வரவும். ஹோட்டல் றொலெக்ஸ், 340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
[19664]

யாழ். வர்த்தக புலன் விசாரணை பாதுகாப்பு சேவையினருக்கு உடனடியாக பாதுகாவலர்கள் தேவை. நேர்முகப் பரீட்சை 13-02-92 இல் 9—12 மணி வரை றெஜீஸ்ரார் வீதி, சுதுமலை தெற்கு, மானிப்பாயில் நடைபெறும்.
[19666]

பிரபலமான வியாபாரஸ்தாபனம் ஒன்றிற்கு காசாளராகவும், விற்பனையாளர்களாகவும் கடமையாற்றுவதற்கு படித்த பெண் பிள்ளைகள் தேவை. அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். 15ஆம் திகதிக்கு முன்னர் நேரில் வரவும். 61, மணிக்கூட்டு, வீதி, [வெலிங்டன் சந்திக்கருகாமையில்] யாழ்ப்பாணம்.
[19679]

### உடன் தேவை

புத்தகசாலை ஒன்றுக்கு அனுபவம் வாய்ந்த பெண் விற்பனையாளர்கள் உடன் தேவை. தொடர்பு: தினேஷ் புத்தகசாலை, இல. 19, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.
[19670]

### சோதிட மாந்திரீகம்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள். ''சக்தி சரவணா'', 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானம் முன்பாக] தினசரி பகல் 9 மணி தொடக்கம் 3 மணி வரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை.
(5039)

### தவறிவிட்டது

யுவானி – மிரியம் கொண்செப்ரா ஆகிய எனது அடையாள அட்டையும், பேர்ஸும் சுன்னாகத்திற்கும் யாழ். பிறவுண் வீதிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தொழில்நுட்பக் கல்லூரியில் அல்லது சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் ஒப்படைக்கவும்.
[19675]

### மெய்வல்லுநர் இலக்கம்

கல்லூரி மெய்வல்லுநர் போட்டிகளில் கலந்து கொள்ளும் வீரர்களுக்கான இலக்கங்கள் விற்பனைக்கு உண்டு. பாரதி பதிப்பகம் [A. B. Printers], 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
[C-1491]

### ரைப்ரைட்டர்

Typewriters தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும், சிறந்த முறையில் திருத்தவும், தமிழ் - ஆங்கில தட்டச்சு வேலைகளுக்கும் பியூட்டோ, 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
[சி-1462]

### இடமாற்றம்

ABCDE விவாகப் பொருத்துனர் அலுவலகம் இடமாற்றப்பட்டுள்ளது. இது 16-2-92 முதல் பின்வரும் விலாசத்தில் இயங்கும் 20, கண்டி றோட், சுண்டிக்குளி.
[19678]

---

## கண்ணீர் அஞ்சலி

இறையடி ஏகிய அன்பு வள்ளல்

**அமரர் ஆறுமுகம் சுப்பிரமணியம்**

[உரிமையாளர், யாழ். ஸ்ரீ சுப்பிரமணியம் புத்தகசாலை]

அவர்களின் ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

அபிராமி அச்சகம்,
''செந்தில்ஸ்''.

கொக்குவில்.
[19680]

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டியும்



தோற்றம்: 08 — 10 — 1920

மறைவு. 13 — 01 — 1992

## ஆறுமுகம் முத்துத்தம்பி

(ஓய்வுபெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்)


உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், பெறாமக்கள்,
மருமக்கள், சகோதரர்கள்,
மைத்துனர்கள், பேரப்பிள்ளைகள்.

இல. 95, நாயன்மார் வீதி,
நாயன்மார்கட்டு.
(5035)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## அமரர் கணபதிப்பிள்ளை சிதம்பரநாதன்

(Retired Police Sergeant)

மண்ணில்; 08 — 09 — 1921

விண்ணில்: 13 — 01 — 1992

துன்னாலை தெற்கு கிளான் வளவைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சிதம்பரநாதன் (Retired-Police Sergeant) அவர்கள் 13-01-1992 அன்று இறைபதம் எய்தினார்.

இன்று அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், பின்னர் நடைபெறும் சபிண்டீகரண போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், மைத்துனன்,
பேரப்பிள்ளைகள்.

துன்னாலை.
[5041]

---

ஜே. ஓ. சி. குண்டு வெடிப்பு:

## கைதான பெண்களில் ஒருவர் தொடர்ந்தும் விசாரணையில்

கொழும்பு, பெப். 12

கொழும்பு கூட்டுப்படைத் தலைமையகக் (ஜே. ஓ. சி.) குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக மூன்று மாதங்களுக்கு முன்னர் பம்பலப்பிட்டியில் கைது செய்யப்பட்ட இரண்டு தமிழ்ப் பெண்களில் ஒருவர் தொடர்ந்தும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார்.

இவ்வாறு பொலீஸ் வட்டாரங்கள் கூறியதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

துணை அமைச்சு ஒன்றில் பணிபுரிந்து வந்த இந்த இரு பெண்களில் ஒருவர் அண்மையில் விடுவிக்கப்பட்டு விட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.
(ஒ-எ)

## சுழிபுரத்தில் சிறப்புற நடைபெற்ற வள்ளுவர் விழா

காரைநகர் கொத்தணி அமைப்பின் ஏற்பாட்டில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் திருவள்ளுவர் விழா கடந்த ஞாயிறன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது.

மங்கள இசையுடன் இடம்பெற்ற திருவள்ளுவரின் திருவுருவ ஊர்வலத்தில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் அணி வகுத்துச் சென்றனர். வழக்கம்பரையில் இருந்து புறப்பட்ட ஊர்வலம் விக்ரோறியாக் கல்லூரியைச் சென்றடைந்தது.

காரைநகர் கொத்தணி அதிபர் செ. தேவதாசன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் நல்லை ஆதீன முதல்வர் குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், மில்க்வைற் அதிபர் திரு. க. கனகராசா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

விழாவில் கவியரங்கம், சொற்பொழிவுகள் மற்றும் ஆய்வுரை போன்றவையும் சிறப்புற நடைபெற்றன.
(ஒ-28)

---

## பிறந்த தின வாழ்த்து

★ **பாலசிங்கம் நகுலேஸ்வரன்** ★

ஏழாலையைச் சேர்ந்த நா. பாலசிங்கம்-பராசக்தி தம்பதிகளின் செல்வப் புதல்வன் நகுலேஸ்வரன் தனது 22ஆவது பிறந்த தினத்தை இன்று [12-02-1992] புதன்கிழமை தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, ஆசையம்மா, அண்ணன், தங்கைமார், நண்பர்கள் அனைவரும் நீடூழி காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

ஏழாலை மேற்கு,
ஏழாலை,
சிவகுரு வீதி,
[19677]

---

## தேவை

பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்கு பாவனையில் உள்ள தமிழ் தட்டச்சு இயந்திரம், கையால் தைக்கக் கூடிய தையல் மெஷின், மூன்று சில்லு சக்கரவண்டி தேவை. உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

வ. பரமசிவம்,
நிர்வாகப் பொறுப்பாளர்.

அகதிகள் புனர்வாழ்வு நிதியம்,
374, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
[19674]

---

உ

விராட் விஸ்வப்பிரம்மனே நம

## நன்றி நவிலல்

திருவருள் துணைகொண்டு சென்ற 5-2-92 இல் வண்ணை ஸ்ரீ காமாட்ஷி அம்பாள் [நாச்சிமார் கோவில்] திருமண மண்டபத்தில் நடந்தேறிய சிவலிங்கம் - விஜிதகலா ஆகியோரது திருமண விழாவின் போது நேரில் வருகை தந்து சிறப்பித்து, ஆசிகள் வழங்கி வாழ்த்திய நல்லை குருமஹா சன்னிதானம், சிவத்தமிழ்ச் செல்வி அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி, பிரம்மஸ்ரீ மகாதேவக் குருக்கள் மற்றும் அந்தணப் பெருமக்கள், கலைஞர்கள், நாதஸ்வர வித்துவான்கள், அவர்களது குழுவினர், குடும்பத்தினர், உறவினர், மெய்யன்புள்ள நண்பர்கள் ஆகியோருக்கும் மற்றும் உதவியும், ஒத்தாசையும், ஆலோசனைகளும், பரிசுகளும் வழங்கிய சகலருக்கும், எமது குடும்ப அங்கத்தவர் சார்பாக எமது அன்பு கனிந்த நன்றியையும், வணக்கத்தையும் இத்தால் சமர்ப்பிக்கிறோம்.

லெட்சுமண ஆச்சாரி கெங்காதரன்-
குடும்பத்தினர்.

314, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
12-2-1992.
[சி-1504]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### முற்றாக நிறுத்துக

மனித உரிமை மீறல்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு சர்வதேச மன்னிப்புச் சபை ஸ்ரீலங்கா அரசுக்கு 32 சிபார்சுகளைத் தெரிவித்திருந்தது. அவற்றில் இருபத்தெட்டுச் சிபார்சுகளை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது.

பொதுமக்களுக்கு ஆயுதங்கள் வழங்குவதில் கட்டுப்பாடு தேவை என்பது அரசாங்கம் ஏற்றுக் கொண்ட சிபார்சுகளில் ஒன்றாகும்.

தற்போதைய மோதலில் காணப்படும் இனரீதியான அம்சத்தை மனதில் கொண்டு, பொது மக்கள் (சிவிலியன்கள்) தங்களைப் பாதுகாத்துக் கொள்ள அரசினால் ஆயுதங்கள் வழங்கப்படுகின்றன. இவ்வாறு ஆயுதங்கள் வழங்கப்படுவதில் கடுமையானதும், பயன்தரத் தக்கதுமான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டும் — என்பதே மன்னிப்புச் சபையின் சம்பந்தப்பட்ட சிபார்சாகும்.

நாட்டின் ஏனைய பகுதிகளை விட வடக்கு - கிழக்கு மாகாணத்தின் எல்லைகளில் வாழும் சிங்களப் பொது மக்களுக்கே குறிப்பாக ஆயுதங்கள் வழங்கப்படுகின்றன. நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ளவர்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்படுவது குறைவு. தமிழர்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்படுவது என்ற பேச்சுக்கே இடமில்லை!

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் எல்லைப் பகுதிகளிலும் கூட, அரசாங்கத்தினால் அல்லது அதன் உடந்தையுடன் குடியேற்றப்பட்ட சிங்களவர்களுக்கே பெருந்தொகையான ஆயுதங்கள் வழங்கப்படுகின்றன. கிழக்கில் உள்ள ஏனைய சிங்களக் குடியேற்றத்திட்ட வாசிகளுக்கும் ஆயுதங்கள் வழங்கப்படுகின்றன.

குடியேற்றத் திட்டங்களில் வாழும் சிங்கள மக்களின் பாதுகாப்புக் கருதியே அவர்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்படுவதாக அரசாங்கம் எப்போதும் கூறி வருகிறது. இத்தனைக்கும் இராணுவம், பொலிஸ், அதிரடிப்படை, ஊர்காவல்படை என்று எத்தனையோ வகையான பாதுகாப்பு இயந்திரங்கள் உண்டு. அவற்றுக்கும் மேலதிகமாகவே சிங்களப் பொது மக்களுக்கும் ஆயுதங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவை போன்ற நடைமுறைகள் மக்களை மோத வைப்பதாகும். அதாவது சிங்களப் பொதுமக்களே தமிழர்களைத் தாக்குவதற்குத் தூண்டுவனவாகும்.

பொதுமக்கள் பாதுகாப்புக் கருதி அவர்களுக்கு ஆயுதம் வழங்குவது நிச்சயமாக வன்செயல்களையும், குறிப்பாக தமிழர்களுக்கு எதிரான வன்செயல்களையும் தூண்டும்.

எனவே பொதுமக்களுக்கு ஆயுதங்கள் வழங்குவதை கட்டுப்படுத்துவது மட்டும் போதாது. அதனை முற்றாக நிறுத்த வேண்டும்.

சட்ட பூர்வமாக எல்லோருக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டிய இராணுவமே தமிழ் மக்களின் பாதுகாப்புக்கு பெரும் ஆபத்தாக விளங்குகிறது. சிங்களப் பொதுமக்களை ஆயுதபாணிகள் ஆக்கினால் தமிழர்களுக்கு அதனால் ஏற்படக் கூடிய விளைவு பேரழிவாகவே இருக்கும்.

சிங்களப் பொதுமக்களை அரசாங்கம் ஆயுதபாணீகளாக்கினால் தமிழர்களும் தங்கள் பாதுகாப்புக் கருதி ஆயுதபாணிகளாக மாறத் தூண்டப்படுவர். இரு சாரார் கையிலும் ஆயுதம் தாராளமாக இருந்து விட்டால்...... இலங்கை என்ற ஒரு நாடும், மக்களும் இருக்கமுடியுமா?

# இனப்பிரச்சினை தீர்வுக்கு இந்தியா முட்டுக்கட்டை

## சாடுகிறார் யோகி

லண்டன், பெப். 12

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண மேற்குலக நாடுகள் எடுத்து வரும் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டையாக இந்தியாவின் செயல் அமைந்துள்ளது.

இவ்வாறு சாடியுள்ளார் விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர் திரு. யோகரத்தினம் யோகி.

பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் திரு. யோகி மேலும் கூறியதாவது;

ஸ்ரீலங்கா அரசும், சர்வதேச சமூகமும் ஈழத்தமிழர் பிரச்சினையில் தலையிட்டு, தீர்வு ஒன்றைக் காணுவதை இந்தியா விரும்பவில்லை.

ராஜீவ்காந்தி கொலையில் எம்மைத் தொடர்புபடுத்தி— எமது தலைவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்து— எமது இயக்கத்துக்கு மாசு கற்பிக்க இந்தியா முனைகிறது.

இங்குள்ள சூழ்நிலையில் வேறு யாராவது நல்ல முயற்சியை மேற்கொள்ளும்போது அதில் தலையிட்டு குழப்புவது விரும்பத்தக்கதல்ல.

இந்தியா இதனை உணர்ந்து மற்றவர்களிடம் இந்த சமாதானப் பணியை விட்டு விடுவதே நல்லது— என்றார்.

அமைச்சர் தொண்டமானின் தீர்வுத் திட்டத்தில் சில நல்ல அம்சங்களும் உண்டு. அவரது யோசனையில் எமது தாயகம் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஆனால் சிங்கள இனவாதம் தொண்டாவின் வருகையை தடுத்து வைத்துள்ளது. இதனால் பேச்சுவார்த்தைக்கான கதையும் முடிவடைந்ததாகத் தெரிகிறது — என்றும் திரு. யோகி அந்தப் பேட்டியில் தெரிவித்துள்ளார். (ஒ-3)

## மாகாணங்களில் பிரதி தபால் மா அதிபர்

கொழும்பு, பெப். 12

மே மாதம் முதலாம் திகதி முதல் ஒவ்வொரு மாகாணத்திற்கும் பிரதி தபால் மா அதிபர் நியமிக்கப்படுவர். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 2 அல்லது 3 தபால் அத்தியட்சகர்களும் நியமிக்கப்படவிருக்கின்றனர்.

இத்தகவலை அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [உ-எ]

## உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

மயிலணி, பெப் 12

ஸ்கந்தா விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் ஏழு பேர் கலந்து கொள்ளும் அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்று ஆரம்பமாகி உள்ளது. இப் போட்டியில் 24 கழகங்கள் கலந்து கொள்கின்றன. (இ)

## குரக்கன் கொள்வனவு

யாழ்ப்பாணம், பெப். 12

குரக்கன் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள விவசாயிகளிடம் இருந்து தமிழீழ ஆய்வு நிறுவனம் குரக்கனை நியாயமான விலையில் கொள்வனவு செய்யும்.

ஒரு கிலோ சாதாரண குரக்கனை ரூபா 28 ஆகவும், ஒரு கிலோ விதை குரக்கனை ரூபா 35 ஆகவும் கொள்வனவு செய்ய தாம் தயாராக இருப்பதாக ஆய்வு நிறுவனத்தினர் அறிவித்துள்ளனர். (இ-5)

## வெலிகம ஏ. எஸ். பியும் கட்டாய லீவில்!

கொழும்பு, பெப். 12

வெலிகம உதவி பொலீஸ் அத்தியட்சகர் ஏ. எஸ். பி. திரு. எஸ். குருசிங்கா மூன்று மாத கட்டாய லீவில் அனுப்பி வைக்கப்பட்டார்.

லீவு முடிவடைந்ததும் இவர் கட்டாய ஓய்வு பெறுவார் என்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஒழுங்கீனமான நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என்ற காரணத்திற்காகவே இவர் மீது இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

## உடுகம்பொலவுக்கு வழங்கிய பாதுகாப்பு வாபஸ்!

கொழும்பு, பெப். 12

ஓய்வுபெற முன் கட்டாய லீவில் அனுப்பப்பட்டிருக்கும் டி. ஐ. ஜியான பிரேமதாஸ உடுகம்பொலவுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பும் உத்தியோகபூர்வ வாகனமும் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பட்டிருப்பதாக பொலீஸ் தலைமையக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உடுகம்பொல தொடர்ந்தும் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திலேயே வசித்து வருகிறார். எனினும் அங்கிருந்த பாதுகாப்புப் படையினர் விலக்கிக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள் எனவும் அத்தகவல்கள் மேலும் தெரிவித்தன.

உடுகம்பொலவின் விடுமுறை எதிர்வரும் ஏப்ரல் 15 ஆம் திகதியுடன் முடிவடைவதாக பொலீஸ் தலைமையக வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜே. வி. பி. தீவிரவாதிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுத்தவர்களில் டி. ஐ. ஜி. உடுகம்பொல முக்கியமானவர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-10)

## இந்து சமய சமூக அபிவிருத்தி நிதியம்

யாழ்ப்பாணம், பெப். 12

இந்து சமயப் பேரவை, இந்து சமய சமூக அபிவிருத்தி நிதியம் என்னும் பெயரில் நிதியம் ஒன்றை இம்மாதம் 16 ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்யும்.

இந்த நிதியத்தைப் பரிபாலிக்க பணிப்பாளர் சபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (இ-51)

## எழுதுவினைஞர் ஆட்சேர்ப்பு பரீட்சை

யாழ்ப்பாணம், பெப். 12

மாகாண சேவைத் திட்டத்தின் கீழ் அமைய அடிப்படையில் எழுதுவினைஞர் தரங்களுக்கு ஆட்சேர்ப்பதற்கான பரீட்சை எதிர்வரும் சனிக்கிழமை யாழ். நகரில் பின்வரும் பாடசாலை மண்டபங்களில் நடைபெறவுள்ளது.

பரீட்சை மண்டபங்கள் வருமாறு;-

கனகரத்தினம் ம. ம. வி., யாழ். இந்துக் கல்லூரி, யாழ். இந்து மகளிர், யாழ். மத்திய கல்லூரி, திருக்குடும்ப கன்னியர் மடம், கன்னியர் மடம் ம. வி., பரி. யோவான் கல்லூரி, வேம்படி மகளிர். (ஓ)

## இந்திய பொலீஸார் விசாரணையாம்

கொழும்பு, பெப். 12

கொழும்பு சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 12 விடுதலைப் புலிகளை இந்திய விசேட புலனாய்வுப் பிரிவுப் பொலீஸார் விசாரணைக்கு உட்படுத்தினராம்.

ராஜீவ் காந்தி கொலையில் அவர்களுக்குச் சம்பந்தம் உண்டா என்பதைக் கண்டறியவே அவ்விசாரணை நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

# அமெ. - இந்திய கடற்படை ஒத்திகை அணிசேரா நிலையைப் பாதிக்காது

## தூதர் ஜா தெரிவிப்பு

கொழும்பு, பெப். 12

இந்தியாவும், அமெரிக்காவும கூட்டுக்கடற்படை ஒத்திகையை இந்துமகா சமுத்திரத்தில் நடத்துவது இந்தியாவின் அணிசேராக் கொள்கையை பாதிக்காது.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் என். என். ஜா கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது;

கெடுபிடி யுத்தம் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து புதிய நிலைமை தோன்றியுள்ளது.

ஒரு கட்டத்தில் விரும்பத்தகாததும் உறவுக்குப் பகையானதாகவும் கருதப்பட்ட விஷயங்கள் இப்போது வித்தியாசமான வர்ணத்தைப் பெறுகின்றன.

அமெரிக்காவுடனான உறவை வளர்த்துக் கொள்வது என்ற முடிவு ராஜீவின் காலத்திலே ஆரம்பிக்கப்பட்டு விட்டது.

இரு நாடுகளுக்கும் இடையே இராணுவ உறவை வளர்த்துக் கொள்வது, இராணுவ தளபாடங்களை அமெரிக்காவிடமிருந்து பெறுவது ஆகியன ராஜீவின் ஆட்சிக் காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டுவிட்டது.

ஆகவே அமெரிக்க உறவை சீராக்குவதில் புதுமை எதுவும் இல்லை.

கூட்டுக் கடற்படை ஒத்திகை நடத்துவது, இந்து சமுத்திரத்தில் வெளிநாட்டுப் படைகள் நிரந்தரமாக நிலைகொள்ள அனுமதிப்பது என்ற அர்த்தமாகாது. சில இராணுவ தேவைகளின் நிமித்தம் கூட்டுக் கடற்படை ஒத்திகை தற்காலிகமான ஓர் அம்சமாகவே இருக்க முடியும்.

இந்து சமுத்திரத்தை அமைதிப் பிராந்தியமாக்கும் யோசனையில், குறுகிய கால கூட்டுக் கடற்படை ஒத்திகையை நடத்துவதற்குத் தடை விதிப்பது பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டிருப்பதாக நான் எண்ணவில்லை.

— இப்படி திரு. ஜா கூறினார். (ஒ-எ)

## வவுனியாவுக்கு 27 முதல் இரவு தபால் ரயில் சேவை

கொழும்பு, பெப். 12

கொழும்பு -வவுனியா இரவு தபால் ரயில் சேவை இம்மாதம் 27 ஆம் திகதி முதல் (வியாழக்கிழமை) ஆரம்பிக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ரயில்வே பகுதியினர் அறிவித்திருக்கின்றனர்.

27ஆம் திகதி இரவு 11 மணிக்கு கொழும்பு கோட்டையில் இருந்து புறப்படும் இந்த ரயில் வவுனியாவை காலை 4-35க்கு சென்றடையும்.

பின்னர் முற்பகல் 11மணிக்கு வவுனியாவில் இருந்து புறப்படும் இந்த ரயில் கொழும்பு - கோட்டையை மாலை 5 மணிக்கு வந்தடையும்.

கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக கொழும்பு-வவுனியா இரவு ரயில் சேவை இடைநிறுத்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. [ஒ-எ]

## தாண்டிக்குளம் வரையில் ரயில்சேவை நீடிக்கப்படும்

கொழும்பு, பெப். 12

தற்பொழுது வவுனியா வரை நடைபெறும் ரயில் சேவையை, தாண்டிக்குளம் வரை விஸ்தரிப்பதுபற்றி ஆலோசிக்கப்பட்டு வருவதாக கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

கடந்த ஞாயிறு வவுனியா செயலகத்தில் நடந்த மாநாடு ஒன்றில் இது குறித்து ஆராயப்பட்டதாகவும், இம் மாநாட்டில் ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் திரு. ஜினதாசவும் கலந்து கொண்டார் எனவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் படையினர் இந்த யோசனைக்கு இணக்கம் தெரிவித்திருப்பதாகவும் நம்பப்படுகிறது. [ஒ-எ]

## கொழும்பில் தமிழரிடம் கொள்ளை:

## போலி சி. ஐ. டியினர் மூவர் பொலீஸாரால் கைது

இரகசியப் பொலீஸார் என்று தம்மை அடையாளம் காட்டிக் கொண்டு பல கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்த மூவரை பம்பலப்பிட்டி பொலீஸார் கைது செய்தனர்.

கொழும்பில் தங்கியிருக்கும் வடபகுதி மக்களே இந்த கொள்ளையர்களின் கைவரிசைக்கு ஆளாகி வந்தனர் என்று தெரியவருகிறது. (ஒ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொலைச் சந்தேகநபரைத் தேடி

# இராணுவ முகாமுக்குள் நுழைந்த பொலீஸ் நாய்!

கொலைச் சம்பவம் தொடர்பாக சந்தேக நபரைக் கண்டுபிடிக்க பொலீஸார் பயன்படுத்திய பொலீஸ் நாய், இறுதியில் இராணுவ முகாம் ஒன்றினுள் நுழைந்து நின்றது.

அம்பாறையில் கடந்த சனிக்கிழமை சிங்களவர் ஒருவர் இனந்தெரியாத நபர் ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக பொலீஸார் புலன் விசாரணை நடத்தியபோது, இச்சம்பவம் இடம்பெற்றது.

கொலை நடந்த இடத்தில் இருந்து ரி – 56 ரவை ஒன்றும் இராணுவத் தொப்பி போன்ற ஒரு தொப்பியும் பொலீஸாரால் கண்டெடுக்கப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பாக அம்பாறை நீதிவான் நடத்திய மரணவிசாரணையின்போது, உயிரிழந்த ஏ. பி. பிரேமதிலக என்பவரின் மனைவி தனது சாட்சியத்தில் சொன்னதாவது:-

சம்பவதினம் அதிகாலை இனந்தெரியாத ஒருவர் வீட்டினுள் நுழைந்து என்னை மானபங்கம் செய்ய முயற்சித்தார். நான் சத்தமிடவே, கணவர் நித்திரையால் எழும்பி அந்த நபரைப்பிடிக்க முயன்றார்.

அருகே வராதே என்று எனது கணவரை அந்தநபர் எச்சரித்தார். தொடர்ந்து எனது கணவர் அவரை நெருங்க முயன்றபோது, அந்தநபர் சுட்டார். கணவர் சூடுபட்டு உயிரிழந்தார். அந்த நபர் தப்பி ஓடினார். — இப்படி சாட்சியத்தில் தெரிவிக்கப்பட்டது. [உ-எ]

## ★ தீவுப்பகுதிக்கு

# 3 கோடி 75 லட்சம் ரூபாவுக்கு ஏழு ஜெனரேட்டர்கள்!

தீவுப்பகுதியில் மின்சார விநியோகத்தை மேற்கொள்வதற்காக மூன்று கோடி 75 லட்சம் ரூபா செலவில் ஏழு ஜெனரேட்டர்கள் சிங்கப்பூரில் கொள்வனவு செய்யப்பட்டிருக்கின்றன என்றும்—

இவை அடுத்த வாரம் கொழும்பு வந்து சேரும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பிலிருந்து கப்பல் மூலம் இந்த ஜெனரேட்டர்கள் தீவுப் பகுதிக்கு எடுத்து வரப்படும் என்றும்—

அவை தீவுப்பகுதிக்கு வந்து சேர்ந்ததும் மின்சார சபை ஊழியர்கள் மூலம் மின் விநியோகவேலைகள் மேற்கொள்ளப்படும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது, [உ-3]

# யாழ்ப்பாண மாவட்டத்தில் 4 மாணவர்கள் தெரிவு

யாழ்ப்பாணம், பெப். 12

1991 ஜி. சீ. ஈ. [உயர்தர] பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களைத் தேசிய ரீதியில் பாராட்டும் திட்டத்தின் கீழ், யாழ். மாவட்டத்தில் நான்கு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஏனைய மாணவர்களுடன் சேர்த்து இந்த மாணவர்களையும் கௌரவிப்பதற்காக, இந்த நால்வரையும் அவர்களின் பாடசாலை அதிபர்களுடன் எதிர் வரும் 22 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்துக்கு வருகை தருமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக ஜனாதிபதி செயலகத்திலிருந்து யாழ். அரச அதிபருக்கு நேற்று செய்தி ஒன்று கிடைத்துள்ளது.

பி. அன்பழகன் [ஹாட்லி], என். பிரேமசெல்வி [வேம்படி], தேன்மொழி [வேம்படி], ஏ. அற்புதராசா [வட்டு இந்துக் கல்லூரி] ஆகிய மாணவர்களே யாழ். மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள நான்கு பேருமாவர். [உ-3]

## இறுதியாத்திரை அறிவித்தல்

யாழ். ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை உரிமையாளர்

### திரு. ஆறுமுகம் சுப்பிரமணியம்

அவர்களின்

இறுதிக் கிரியைகள் இன்று (12-02-1992) பிற்பகல் 3 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்திற்குத் தகனம் செய்வதற்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
தி. ஜெயராசா
[ஜெகன்-பேரன்]

63, பீ. ஏ. தம்பி லேன்,
யாழ்ப்பாணம்.

[19681]

இறையடி எய்திவிட்ட

### அமரர் ஆறுமுகம் சுப்பிரமணியம்

(உரிமையாளர், ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை, அச்சகம்)

அவர்களுக்கு எமது இதயம் நெகிழ்ந்த

## கண்ணீர் அஞ்சலிகள்

நிலையான கலைச்செல்வி அருளும் ஓங்க
நீடுபுகழ் சுப்ரமண்ய வள்ள லான
தலைவன்புத் தகசாலைக் கீர்த்தி பெற்ற
தண்டமிழின் பேரறிஞன் சுப்ர மண்யன்
கலைமேவும் சொர்ணத்தின் கணவ னாவன்
காசினியில் நாகரத்னம் சிவரா சாவின்
மலையான தந்தையவர் ஜகனின் பேரன்
மன்னுசிவ பதப்பேறு எய்தி னாரே.

— கவிமாமணி
'அம்மா' - இணுவில்

[சி/1505]

## கொழும்பில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அல்லது பிழையான தகவல் கொடுப்போர் கடும் தண்டனைக்கு உள்ளவர்.

★ தங்குமிடங்கள் அவசர கால ஒழுங்கு விதிகளை மீறும் குற்றத்துக்குப் பயன்படுத்தப்பட்டால் அவை பறிமுதல் செய்யப்படும்,

★ வீட்டில் உள்ள வெளியாட்கள் பற்றிய சரியான விவரத்தைத் தெரிவிக்கத் தவறும் வீட்டுச் சொந்தக்காரர்கள் குற்றம் புரியச் சதி செய்தார் அல்லது உடந்தையாக இருந்தார் என்று கருதப்படுவர், [உ-த]

## காஷ்மீர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ளின் ஆதரவாளர்களும் இந்திய எல்லையை நோக்கிப் புறப்பட்டபோது அதனைப் பாகிஸ்தான் பொலீஸார் வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றனர்.

காஷ்மீர் விடுதலை முன்னணியைச் சேர்ந்த 5 ஆயிரம் முதல் 8 ஆயிரம் தொண்டர்கள் பேரணியில் பங்குபற்றுகின்றனர். வழியில் மேலும் தொண்டர்கள் சேர்ந்து வருகின்றனர்.

தற்போது எல்லையை நோக்கி பாதித் தூரத்தை — சுமார் 15 மைல் தூரத்தை — பேரணி கடந்துள்ளது.

பேரணியைத் தடுப்பதற்காக வழியில் பல செயற்கை மண்சரிவுகளை பாகிஸ்தான் அதிகாரிகள் ஏற்படுத்தியுள்ளனர். வாகனங்கள் செல்லமுடியாதவாறு வீதிகளில் கற்பாறைகள் போடப்பட்டுள்ளன. பாதையை சேறும், சகதியுமாக்குவதற்காக தண்ணீர் பாய்ச்சப்பட்டுள்ளது.

எனினும் பேரணியைத் தொடர்வதில் காஷ்மீர் தீவிரவாதிகள் முனைப்பாக உள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது. மண் சரிவுகள், பள்ளங்கள் போன்றவற்றில் ஏறி இறங்கியும் ஆறு தடைகளைத் தாண்டியும் பேரணி முன்னேறிச் செல்வதாக அறிவிக்கப்பட்டது.

குன்றுகளின் மீது ஏறிச் சென்ற தொண்டர்கள் அவ்வேளை தமது தலைவர் அமானுல்லாகானைத் தங்கள் தோள்களின் மீது மாறி, மாறித் தூக்கிச் சென்றனர்.

இந்திய எல்லையை அடைவதற்கு தமக்கு 2 அல்லது 3 நாட்கள் எடுக்கும் என்றும்—

தாம் எப்படியும், எத்தனை உயிரை இழந்தாலும் இந்திய எல்லையைக் கடப்பது உறுதி என்றும் ஜம்மு-காஷ்மீர் விடுதலை முன்னணி நேற்றும் அறிவித்தது.

இந்தப் பேரணியை இந்திய எல்லைக்கு சில மைல் தொலைவில் வைத்து பாகிஸ்தான் அரசு தடுக்கக்கூடும் என்று சில வட்டாரங்கள் தெரிவித்தன. [உ-எ-த-3]

## அடுத்த..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

திகளில் திருமலையைச் சேர்ந்த 116 குடும்பத்தினர் இலங்கைக்குப் புறப்படுவதற்குத் தயாராக நேற்று முன்தினம் சென்னை வந்து சேர்ந்தனர்.

இதேவேளை —

கோவையில் தங்கியுள்ள — மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த — 323 இலங்கைத் தமிழ் அகதிகள் இராமேஸ்வரத்திற்கு வந்து சேர்ந்தனர். அவர்கள் கப்பல் மூலம் தலைமன்னாருக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## திருத்தம்

நேற்றைய உதயனில் வெளியான திருமதி துரையப்பா பார்வதியின் மரண அறிவித்தலில் அவர் "புளியங்கூடலைச் சேர்ந்தவர்" என்ற [illegible] விடுபட்டு விட்டது என்பதனை அறியத்தருகிறோம்.

# ஈழ அகதிகள் இனிமேல் மன்னார் அனுப்பப்படுவர்

இலங்கைத் தமிழ் அகதிகளை இராமேஸ்வரத்தில் இருந்து தலைமன்னாருக்கு அனுப்பத் தமிழகஅரசு முடிவு செய்திருக்கிறது.

சென்னையில் இருந்து திருகோணமலைக்குக் கப்பல் போய்ச் சேருவதற்கு (இராமேஸ்வரம்- தலைமன்னார் வழியை விட) அதிக நேரம் செல்கிறது. அதனால் செலவும் அதிகமாகிறதாம்!

சென்னையில் இருந்து திருகோணமலைக்குக் கப்பல் செல்ல இரண்டு தினங்களுக்கு மேல் தேவைப்படுகிறது. ஆனால் இராமேஸ்வரத்தில் இருந்து தலைமன்னாருக்கு மூன்று மணித்தியாலங்களில் சென்றுவிடலாம்.

இராமேஸ்வரத்தில் இருந்து தலைமன்னாருக்குச் செல்ல ஏற்படும் செலவு ரூபா 50 மட்டுமே என்றும் தெரிவிக்கப்பட்டது.

கப்பல் கிடைத்ததும் இதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்று அதிகாரபூர்வமான வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-எ)

# சதாமை பதவி கவிழ்க்க சி.ஐ.ஏக்கு புஷ் அனுமதி!

வாஷிங்டன், பெப். 12

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேனைப் பதவியில் இருந்து அகற்ற அமெரிக்க உளவுப் பிரிவான சி.ஐ.ஏக்கு ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் அனுமதி வழங்கி விட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி சதாம் ஹுசேனை அகற்றும் முயற்சியில் சி.ஐ.ஏ. முழு மூச்சாக ஈடுபடவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சதாம் ஹுசேனைப் பதவியில் இருந்து அகற்றும் தமது முயற்சியில் ஜோர்ஜ் புஷ் வெற்றி பெற்றால் இரண்டாவது முறையும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் அவர் இலகுவாக வெற்றியீட்ட முடியும் என்று ராஜதந்திர வட்டாரங்கள் கூறின.

## மீனவர் மரணம்

தென்மராட்சி, பெப். 12

காலையில் மீன்பிடிக்கச் சென்றவர் மாலையில் வலையில் சிக்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். இச்சம்பவம் கடந்த சனியன்று நாவற்குழி கோவிலாக் கண்டி கடற்பகுதியில் இடம்பெற்றது.

இதேயிடத்தைச் சேர்ந்த வாரி மகேஸ்வரன் [வயது 28] என்னும் இளைஞரே மரணமானவராவார்.

வலிப்பு நோய்க்கு அடிக்கடி இவர் ஆளாகி வந்ததாக மரண விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது. வலிப்பு நோயினால் மரணம் சம்பவித்ததாக சாவகச்சேரி திடீர் மரண விசாரணை அதிகாரி நா. தர்மேந்திரா தீர்ப்பு வழங்கினார். [உ-117]

## சுன்னாகம்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யான 132 கே. வி. மின் இணைப்பு பாதை திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்படும் - என்றும் அவர் கூறினார்.

யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய திருத்த வேலைகளுக்குத் தேவையான உபகரணங்கள் கப்பல் மூலம் கொழும்பில் இருந்து எடுத்து வரப்படும் என்றும் —

திருத்த வேலைகளுக்கு சுமார் மூன்று கோடி ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி நாகரத்தினம்

கந்தர்மடத்தை வசிப்பிடமாகக் கொண்ட சின்னத்தம்பி நாகரத்தினம் 10 – 02 – 1992 இல் காலமானார். இவர் சுதுமலை கண்ணி தோட்டத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற சுதேச வைத்தியர் சின்னத்தம்பியின் சிரேஷ்ட புதல்வனும், பராசக்தியின் அன்புக் கணவரும், இரட்ணகுமார், இரட்ணசோதி, இரட்ணதாஸ், இரட்ணநேசன், இரட்ணரஞ்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி இ. சந்திரிகா, திருமதி இ. கலைவாணி ஆகியோரின் அன்பு மாமனாரும், இளைப்பாறிய கூட்டுறவு உத்தியோகத்தர் சி. தர்மலிங்கத்தின் அன்புச் சகோதரரும், இளைப்பாறிய நீர்ப்பாசன பொறியியலாளர் பெ. சக்திவேல், திருமதி இ. நல்லம்மா ஆகியோரின் மைத்துனரும், இரட்ண பிரசாந்திகா, பார்த்திபன் ஆகியோரின் அன்புப் பேரனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
சி. தர்மலிங்கம்,
(சகோதரர்)

278, அரசடி வீதி,
கந்தர்மடம்.

(19676)

### ந. செல்லத்துரை ஐயர்

மானிப்பாய் ஆஸ்பத்திரியடியைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் நடேச ஐயர் செல்லத்துரை ஐயர் [8-2-92] அன்று சிவபதமடைந்துவிட்டார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் [9-2-92] ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றன என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் அறியத்தருகிறோம்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

ஆஸ்பத்திரியடி,
மானிப்பாய்.

தகவல்:
சோ. முருகதாஸ் [மருமகன்]
[நில அளவையாளர்]

[19682]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 12-2-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org